1981 மே 8]

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, வறட்சியும் வெள்ளமும் தமிழகத்தில் மாறி மாறி வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் நிரந்தர பாசன வசதி அளிக்க ஆங்காங்கே அணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு அணை கட்ட இதுவரையில் பணி தொடங்கப்படவில்லை. அந்த பணியைத் தொடங்க துரித நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

வெள்ளாகுளம் பகுதியில் புதிய பாசனக் கண்மாய் அமைக்கும் திட்டம்

* வினா எண். 959— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம் வெள்ளாகுளம் கிராமத்தருகே ரூ. 5.60 லட்ச மதிப்பீட்டில் ஒரு புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட வேலை விரைவில் தொடங்கப்படும் என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் அமைக்கப்படும் பாசனக் கண்மாய் ஆயக்கட்டில் வரக்கூடிய மொத்த நிலப்பரப்பு எவ்வளவு இந்த வேலைகளைச் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கேட்கப்பட்டு விட்டனவா? இன்னும் காண்ட்ராக்ட் விடப்படவில்லை என்றால் எவ்வளவு காலத்திற்குள் வேலை தொடங்கும்? இப்போது வறட்சியாக இருப்பதால் இந்த வேலையை உடனடியாகத் தொடங்கினால் வறட்சி நிவாரணப் பணியாகவும் அமையும். ஆகவே உடனடியாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, இந்த புதிய கண்மாயிலிருந்து .13 மில்லியன் கன அடி அளவுக்கு தண்ணீர் தேக்கக்கூடிய புதிய ஏரி அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 78 ஏக்கா புதிய நிலங்கள் - இதுவரை பாசன வசதி இல்லாத நிலங்கள்— பாசன வசதியடையும். இப்போது இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். டெண்டர், மற்ற விவரங்கள் எல்லாம் முடிந்துவிட்டனவா என்ற குறிப்பு இல்லை. முடிக்கப்படாமல் இருந்தாலும், உடனடியாகத் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

சித்தமல்லி கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம்

* வினா எண். 960 —திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடையார் பாளையம் தாலுகா சித்தமல்லி கிராமத்தில் 7½ கோடி ரூபாய் திட்டத்தில் ஏரி ஒன்று வெட்டி அமைப்பதற்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் குறுக்கே ரூ. 240 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். 846 ஏக்கர் நஞ்சைநிலங்கள் பாசன உறுதிபெறும்.

திரு. எஸ். இராசாராமன் : துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் இந்தத் திட்டம் 7½ கோடி ரூபாய்க்குப் போடப்பட்டதாகத் தெரிகிறது. அதை ஏன் 2.40 கோடி ரூபாயாகக் குறைத்தது இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் எத்தனை கோடிக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. அவர்களே, அதை நிறைவேற்றியிருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. இந்த ஆட்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்ததற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்திருக்க வேண்டும்.

திரு. எஸ். இராசாராமன் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி இந்த அளவுக்குத் திட்டம் போட்டு, நிறைவேற்றுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும்கூட 7½ கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்றினால் இன்னும் அதிகமான பாசன வசதி பெற முடியும். அரசுக்கு மிகவும் வேண்டியவர்களுடைய நிலம் பாதிக்கும் என்பதால்தான் அந்தத் திட்டம் இந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?